


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 04 | Issue: 068 | 4 Pages | 07.10.2026 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 04 | இதழ்: 068 | 4 பக்கங்கள் | 07.10.2026 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்**

**குற்றமும் ஆங்கே தரும்**

**விளக்கம்:** நடுவுநிலைமை இல்லாமல் பிறர்க்குரிய நல்ல பொருளை ஒருவன் கவரவிரும்பினால்அவனுடையகுடியும் கெட்டுக் குற்றமும் அப்போழுதே வந்து சேரும்.

## பெரும்பான்மை இல்லாததால் ஸ்பெயினில் நாடாளுமன்றம் திடீர் கலைப்பு



மாட்ரிட், அக்.7

ஸ்பெயினில் நாடாளுமன்றத்தை திடீரென கலைத்து அந்த நாட்டின் பிரதமர் சான்செஸ் அறிவித்தார். பெரும்பான்மை இல்லாததால் நவம்பர் 29ந்தேதி அவசர பொதுத்தேர்தலை சந்திப்பதாக தெரிவித்தார். பெரும்பான்மை இல்லைஸ்பெயின் நாட்டின் பிரதமராக பெட்ரோ சான்செஸ் உள்ளார். நாடாளுமன்றத்தின் கீழ்சபையான 'காங்கிரஸ் ஆப் டெபுடீஸ்' அவையில் மொத்தம் 350 இடங்கள் உள்ளன. பிரதமர் பெட்ரோ சான்செஸின் தற்போதைய சிறுபான்மை கூட்டணி அரசாங்கம் இந்த 350 இடங்களில் மொத்தம் 147 இடங்களை மட்டுமே தன் வசம் வைத்துள்ளது.அதாவது பிரதமர் சான்செஸின் சோசலிச கட்சி 121 இடங்க ளையும், இடதுசாரி கூட்டணி பங்காளிகள் 26 இடங்கள் வைத் துள்ளது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைக்கு 176 இடங்கள் தேவை என்ற நிலையில், சான்செஸின் இந்த இடதுசாரி கூட்டணி அரசு சட்டங்களை நிறைவேற்ற பிராந்திய மற்றும் சிறு கட்சிகளின் ஆதரவையே நம்பியிருந்தது.ஆளுங்கட்சி மீதான நம்பிக்கையிழப்புஸ்பெயினில் விலைவாசி மற்றும் வீட்டு வாடகை ராக்கெட் வேகத்தில் உயர்ந்தது. அப்போது வாடகை கொடுக்க முடியா ததால் மாட்ரிட் நகரில் 87 வயது முதியவர் ஒருவர் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து நாடு முழுவதும் பெரும் மக்கள் போராட்டம் வெடித்தது. சான்செஸின் சிறுபான்மை அரசால் இந்த நெருக்கடியைச் சட்டப்பூர்வமாகச் சமாளிக்க முடியவில்லை. இதனால் மிகக் கடுமையான வாடகை உயர்வு மற்றும் வீட்டுவசதி பற்றாக்குறையைக் கட்டுப்படுத்த மத்திய அரசு 2 அவசர சட்டங்களை கொண்டு வந்தன. சான்செஸ் தலைமையிலான ஆளுங்கட்சி கொண்டு வந்த 2 அவசர சட்டங்களை எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் தோற்கடித்தன.நாடாளுமன்றம் கலைப்புபெட்ரோ சான்செஸ் கட்சிக்கு கொடுக்கப்பட்ட ஆதரவை கூட்டணி கட்சிகள் விலக்கியதால் இந்தநிலை ஏற்பட்டது. இதனால் நாடாளுமன்றம் முற்றிலுமாக முடங்கும் அபாயம் ஏற்பட்டது.நாடாளுமன்றமுடக்கத்தைஉடைத்துபுதியபெரும்பான்மையைப் பெறபெட்ரோசான்செஸ்தனதுஅமைச்சரவையைகலைப்பதாகஅறிவித்தார். நாடாளுமன்றத்தில் அரசு கொண்டு வந்த சட்டங்களை எதிர்க்கட்சிகள் முடக்கியதால், சான்செஸ் தனது ஆட்சிக் காலம் முடியும் முன்பே (2027க்கு முன்) நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, மக்களிடம் புதிய ஆதரவைக் கோரி தேர்தலைச் சந்திக்கிறார். இதற்கான தேர்தல் அடுத்த மாதம் (நவம்பர்) 29ந்தேதி நடைபெறுகிறது. அதில் தனது கட்சி சார்பில் மீண்டும் அவரே போட்டியிடுவதாக அறிவித்துள்ளார். அதுவரை பெட்ரோ சான்செஸ் தலைமையில்ஸ்பெயினில்இடைக்காலஅரசாங்கத்தின்ஆட்சிநடைபெறும்.

## நைஜீரியா: ராணுவ விமானம் ஆற்றில் விழுந்து விபத்து 32 பேர் பலி



அபுஜா, அக். 7

நைஜீரியாவில் ராணுவ விமானம் ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் 32 பேர் உயிரிழந்தனர். மேற்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு நைஜீரியா. இந்நாட்டின் பெனின் நகரில் இருந்து லகோஸ் நகருக்கு நேற்று ராணுவ விமானம் புறப்பட்டது. அந்த ராணுவ விமானத்தில் 32 பேர் பயணம் செய்தனர். இந்நிலையில், லகோஸ் நகர் அருகே சென்றபோது விமானம் அப்பகுதியில் உள்ள ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த 32 பேரும் உயிரிழந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளான விமானத்தின் சிதைந்த பாகங்களையும், உயிரிழந்தவர்களில் சிலரின் உடல்களையும் மீட்டுள்ளனர். ஆனால், இந்த விமான விபத்தில் உயிரிழந்த சிலரின் உடல்களை தேடும் பணியில் மீட்புக்குழுவினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். அதேவேளை, இந்த விமான விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சுதந்திர தின கொண்டாட்டத்திற்காக யானைகள் வேட்டை: வனவிலங்கு ஆர்வலர்கள் எதிர்ப்பு



கபரோன்: அக். 7

ஆப்பிரிக்க நாடான போட்ஸ்வானா தனது 60 வது சுதந்திர தினத்தை கடந்த 30ந்தேதி கொண்டாடியது. இதையொட்டி நடைபெற்ற கொண்டாட்ட விருந்துக்காக 23 யானைகளை சுட்டுக்கொல்ல அந்நாட்டு அரசு அதிகாரப்பூர்வ அனுமதி வழங்கியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. உலகிலேயே அதிக எண்ணிக்கையில்,சுமார்1.3லட்சம்யானைகள்வாழும்நாடாகபோட்ஸ்வானா உள்ளது. கிராமப்புற மக்களுக்கு யானை இறைச்சியை வழங்குவதற்காக இந்த யானைகளைவேட்டையாடஅனுமதிவழங்கப்பட்டதாகதெரிவிக்கப்பட்டது. யானைகளை கொல்வதற்கு வனவிலங்கு ஆர்வலர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.யானைகளைவேட்டையாடுவதுஎஞ்சியுள்ளயானைகளை ஆக்ரோஷமடையச் செய்து, மனிதவிலங்கு மோதலை மேலும் அதிகரிக்கக்கூடும்என்றுஅவர்கள்எச்சரித்துள்ளனர்.எனினும்,எதிர்ப்புகளுக்கு மத்தியில் திட்டமிட்டபடி யானைகள் வேட்டையாடப்பட்டு, அவற்றின் இறைச்சி பொதுமக்களுக்கு வினியோகிக்கப்பட்டது.

# விவசாயிகளை வஞ்சிக்கும் த.வெ.க. ஆட்சியில், வேளாண்மைத் துறைச் செயலாளர் நியமனம் எப்போது? உதயநிதி கேள்வி

சென்னை, அக். 7

புதிய முழுநேர வேளாண்மைத் துறைச் செயலாளரை உடனடியாக நியமிக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றுசட்டமன்றஎதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைச் செயலாளராக இருந்த சங்கர் ஐ.ஏ.எஸ்., தொல்லியல் ஆணையராகப் பணியிட மாற்றம் செய்யப்பட்டு ஒரு மாதம் ஆகப் போகிறது. ஆனால், இப்போது வரை வேளாண்துறைக்கு முழுநேரப் பொறுப்பில் புதிய செயலாளர் நியமிக்கப்படாமல் காலம் தாழ்த்தப்படுவது, உழவர் பெருமக்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. தனி நிதிநிலை அறிக்கையைக் கொண்ட வேளாண்துறை போன்ற ஒரு முக்கியத் துறைக்கு முழுநேரப் பொறுப்பில் செயலாளர்கூட இல்லாமல் இருப்பதை என்ன காரணம் சொல்லி இவர்களால் நியாயப்படுத்த முடியும்?



பருவமழை தொடங்கவுள்ள நேரத்தில், வேளாண்மைத் துறைக்கு நிலையான நிர்வாகத் தலைமையும், துரிதமான ஒருங்கிணைப்பும் தேவை என்பதை எவரும் மறுக்க முடியாது. குறிப்பாக, விவசாயிகளுடன் நேரடியாகத் தொடர்புடைய முடிவுகள் தாமதமின்றி எடுக்கப்படுவதற்கும், மாவட்ட அளவிலான பணிகளைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கும் இது அவசியமானது. இதனைக் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டிய, துறை அமைச்சரும் முதல்அமைச்சரும் 'வேறு வேலைகளில்' தான் மும்முரம் காட்டுகின்றனர்.

த.வெ.க. ஆட்சிக்கு வந்ததுமே, பயிர்க்கடன் தள்ளுபடியில் மோசடி செய்தார்கள். இயற்கையால் குறுவை பொய்த்து, த.வெ.க. அரசின் சிந்தனையற்ற செயல்பாட்டால் சம்பா சாகுபடியும் பாதிப்பைச் சந்தித்திருக்கிறது. இப்படித் தொடர் ஏமாற்றங்களால் விரக்தியில் உள்ள விவசாயப் பெருமக்கள், தமிழ்நாடெங்கும் போராடி வருகின்றனர்.

நேற்றுகூட, கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர் வராததால், முத்துப்பேட்டை யில் விவசாயிகள் சாலை மறியல் செய்துள்ளனர். தண்ணீர் திறந்துவிடக் கோரி, விவசாயிகள் வீராணம் ஏரியில் இறங்கிப் போராட்டம் நடத்தியுள்ள னர். தேர்தல் அறிக்கையில் சொன்னபடி, பயிர்க்கடனை முழுமை யாகத் தள்ளுபடிசெய்ய வலியுறுத்தி, சென்னையில் வருகிற 14ம்தேதி, தலைமைச் செயலகத்தை முற்றுகையிடப் போவதாகத் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் கூறியுள்ளனர்.

இத்தகைய சூழலில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைக்கு அனுபவம் வாய்ந்த மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி நியமிக்கப்பட்டு, உழவர்களின் துயர் துடைப்பதற்கான பணிகள் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால், அந்தத் துறையைப் பொறுப்புஏற்பாட்டில்விட்டிருப்பது, வேளாண்குடிப் பெருமக்களின் நலனில் இந்த அரசுக்குத் துளியும் அக்கறை இல்லை என்பதையே காட்டுகிறது. 'செயல்படாத அமைச்சர், இல்லாத செயலாளர்' எனத்த.வெ.க.ஆட்சியைப்போலவே வேளாண்துறையும் திண்டாடுகிறது.

உலகுக்கேஉணவளிக்கும்உழவைக் காப்பாற்றுவதில் இனியும் காலதாமதம் செய்யாமல், புதிய முழுநேர வேளாண்மைத் துறைச் செயலாளரை உடனடியாக நியமிக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தூங்குமூஞ்சி த.வெ.க. அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## பூண்டி புஷ்பம் கல்லூரி வரலாற்று துறையில் “காந்தி ஜெயந்தி விழா 2026”



தஞ்சை அடுத்துள்ள பூண்டி ஸ்ரீ புஷ்பம் கல்லூரியின் வரலாற்று துறையில் காந்தியின் 157 வது பிறந்தநாள் “காந்தி ஜெயந்தி விழா 2026 ” கொண்டாடும் விதமாக “காந்தி ஓர் சகாப்தம்” எனும் தலைப்பில் கட்டுரை போட்டி நடத்தப்பட்டது.

இப்போட்டியினை வரலாற்று துறை தலைவர் டாக்டர். எஸ். பிரபாகரன் தொடங்கி வைத்து உரையாற்றும் போது, “இந்தியதேசத்தந்தைகாந்திஉலகெங்கிலும் அமைதியின்பாதுகாவலராகவும்,அறநெறி தலைமையின் வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர். அவரது பிறந்த நாளான அக்டோபர் 2 , இந்தியாவில் ‘காந்தி ஜெயந்தி ‘ ஆகவும், உலக அளவில் ‘சர்வதேச அகிம்சை தினமாகவும்’ கொண்டாடப்படுகிறது” என்று புகழாரம் சூட்டினார்.

இந்த கட்டுரைப் போட்டியில் திரளான மாணவர்கள் கலந்து கொண்டு தங்கள் திறமையினை வெளிப்படுத்தினர் . முதல் மூன்று இடங்களை முறையே, கே. மகேந்திரன் ; எஸ். ஓவியா ; மற்றும் ஏ. அருள் பெனிதா ஆகிய வரலாற்று துறை மாணவர்கள் பெற்றனர். இக்கல்லூரியின் முதல்வர்(பொறுப்பு)பேராசிரியர்டாக்டர். வி. மணிராஜ் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசும், பாராட்டுச் சான்றிதழும் அளித்து பாராட்டினார்.

இப்போட்டியின்நடுவர்களாகவரலாற்று துறை உதவி பேராசிரியர்கள் டாக்டர். என். பாண்டியன், டாக்டர். எஸ். தேன்மொழி மற்றும் டாக்டர். ஜி. பதி ஆகியோர் செயல்பட்டனர். இந்த நிகழ்ச்சியினை வரலாற்று துறை தலைவர் டாக்டர். எஸ். பிரபாகரன் ஏற்பாடு செய்தார். முடிவில், வரலாற்று துறை உதவி பேராசிரியர் டாக்டர். ஜி. பதி நன்றி உரை நிகழ்த்தினார்.



திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் இயங்கும் தேர்தல்கல்வியறிவுகுழுக்களின்(Electoral Literacy Clubs) ஒருங்கிணைப்பாளர்களுக்கான (Coordinator) மாவட்ட அளவிலான ஆலோசனைக் கூட்டம் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், திண்டுக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி துர்காமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெ.ஜெயந்தி அவர்கள், துணை ஆட்சியர் (பயிற்சி) திருமதி எஸ்.திவ்யலட்சுமி அவர்கள், முதன்மைக் கல்வி அலுவலர் திரு.ம.செல்வக்குமார் அவர்கள், மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள் திரு.த.ஜான்பிரிட்டோ அவர்கள் உட்பட பலர் உள்ளனர்.

## பைக் ரேஸை தடுக்க முன்கூட்டியே நடவடிக்கை எடுக்காதது ஏன்? வேல்முருகன் கேள்வி



சென்னை, அக். 7

பைக் ரேஸை தடுக்க முன்கூட்டியே நடவடிக்கை எடுக்காதது ஏன் என்று வேல்முருகன் கேள்வி எழுப்பி உள்ளார். இது தொடர்பாக, தமிழக வாழ்வுரிமைக்கட்சிதலைவர் வேல்முருகன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது ;

சென்னை நகரின் முக்கியச் சாலைகளில் நள்ளிரவு நேரத்தில் 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் திரண்டு, அதிவேகமாகப் பைக்குகளை ஓட்டியும், வீலிங் உள்ளிட்ட ஆபத்தான சாகசங்களில் ஈடுபட்டும் பொதுமக்களை அச்சுறுத்திய சம்பவம் அதிர்ச்சியளிக்கிறது. வள்ளுவர் கோட்டம் உள்ளிட்ட தலைநகரின் மையப் பகுதிகளில் இத்தகைய அத்துமீறல்கள் நடைபெற்றபோது, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டிய காவல்துறை எங்கே இருந்தது.

மக்கள் தங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்ளத் தாங்களேசாலையில்தடுப்புகளைஅமைக்கும்நிலை ஏற்பட்டிருக்கிறதே. இது சட்டம்ஒழுங்கு நிர்வாகத்தின் தோல்வியல்லவா. இந்தச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது. பைக் சாகசங்கள் ஏற்கனவே உயிரிழப்புகளுக்குக் காரணமாகி வரும் நிலையில், இன்னும் எத்தனை உயிர்கள் பறிபோன பிறகுதான் அரசு விழித்துக் கொள்ளப்போகிறது. மேலும், கைது செய்யப்பட்டவர்களில் சிலரிடம் கஞ்சா பொட்டலங்கள் கைப்பற்றப்பட்டதாக வெளியாகியுள்ள தகவல் மிகுந்த கவலைக்குரியது.

இது வெறும் பைக் ரேஸ் பிரச்சனையா. போதைப்பொருள் பழக்கமும் அதிவேகச் சாகசமும் ஒன்றோடொன்று இணைந்துள்ளதா. இளைஞர்களைக் குறிவைத்துச் செயல்படும் போதைப்பொருள் வலையமைப்பின் பின்னணி என்ன.பைக்ரேஸ்குழுக்களுக்கும்போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கும் தொடர்பு உள்ளதா. இந்தக் கேள்விகளுக்குக் காவல்துறை வெறும் கைது நடவடிக்கைகளால் மட்டும் பதிலளித்துவிட முடியாது. இந்தச் சம்பவத்தின் பின்னணியில் உள்ள முழு வலையமைப்பையும் கண்டறிந்து, அதன் மூலத்தை முற்றிலுமாகத் துண்டிக்க வேண்டும்.

சாலைகள் சாகசக் காட்சிகளுக்கான அரங்கமா. பொதுமக்கள் உயிருக்கு உத்தரவாதம் அளிக்க முடியாத அளவுக்கு இரவு நேரக் கண்காணிப்பு பலவீனமாகிவிட்டதா. பைக் ரேஸ் நடைபெறுவது தெரிந்தும் முன்கூட்டியே தடுக்காதது ஏன்?

தமிழ்நாடு அரசு, குறிப்பாகச் சென்னை மாநகரக் காவல்துறை, இதை ஒரு சாதாரணப் போக்குவரத்து விதிமீறலாகக் கருதாமல், இளைஞர்களின் உயிர், பொதுமக்களின் பாதுகாப்பு, போதைப்பொருள் தடுப்பு, சட்டம்ஒழுங்கு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய தீவிரப் பிரச்சனையாக அணுக வேண்டும்.

பைக் ரேஸில் ஈடுபடுபவர்கள் மட்டுமல்லாது, அவர்களை ஒருங்கிணைப்பவர்கள், ஊக்குவிப்பவர்கள், வாகனங்களை ஏற்பாடு செய்பவர்கள், போதைப்பொருள் வழங்குபவர்கள் என முழுச் சங்கிலியையும் கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சியின்சார்பில்வலியுறுத்திகேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பணிப்பாதுகாப்பு, ஊதிய உயர்வு கோரி போராடிய செவிலியர்களை கைது செய்வதா? அன்புமணி

சென்னை, அக். 7

பணிப்பாதுகாப்பு, ஊதிய உயர்வு கோரி போராடிய செவிலியர்களை கைது செய்வதா என்று பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சென்னை எழும்பூரில் ஊதிய உயர்வு, பணி பாதுகாப்புஉள்ளிட்ட20கோரிக்கைகளைவலியுறுத்தி உண்ணாநிலை போராட்டம் நடத்திய தமிழ்நாடு இடைநிலை சுகாதார பணியாளர்கள் மீது காவல்துறையினர் அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டு, கைது செய்திருக்கின்றனர். உரிமைகளுக்காக அறவழியில்போராடியசெவிலியர்களைகாவல்துறை கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.

இடைநிலை சுகாதார பணியாளர்களான செவிலியர்களுக்கு மிகக்குறைந்த ஊதியம் தான் வழங்கப்படுகிறது. பணி நிலைப்பு, ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பல ஆண்டுகளாக அவர்கள் பணியாற்றி வரும் போதிலும் அவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை.

ஆட்சிக்கு வந்தால் அனைத்து துறைகளிலும் 5 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றும் தற்காலிக பணியாளர்களுக்கு பணி நிலைப்பு வழங்குவோம் என்று தவெக வாக்குறுதி அளித்திருந்தது. அந்த



வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று கோரி தான் செவிலியர்கள் போராட்டம் நடத்தினார்கள். அவர்களின் உணர்வுகளை மதித்து அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு பதிலாக அடக்குமுறையை கட்டவிழ்த்து விடுவது நீதியல்ல.

செவிலியர்களின் கோரிக்கைகளை பரிசீலிப்பதாக சுகாதாரத்துறை செயலாளர் உறுதியளித்ததைத் தொடர்ந்துநவம்பர்3ஆம்தேதிவரைபோராட்டத்தை தற்காலிகமாக ஒத்திவைப்பதாக செவிலியர்கள் அறிவித்துள்ளனர். அதற்குள்ளாக அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்; அவர்கள் மீண்டும் ஒருமுறை போராட்டம் நடத்தும் நிலையை அரசு ஏற்படுத்திவிட கூடாது என்று வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 108 ஆம்புலன்சில் கர்ப்பிணி பெண்ணுக்கு சுகப்பிரசவம்.. தாயும் சேயும் நலம்

புதுக்கோட்டை, அக்.7

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே அவசர காலத்தில் துரிதமாக செயல்பட்ட 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள், கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு வாகனத்திலேயே பாதுகாப்பாக பிரசவம் பார்த்து மனிதநேயத்தை நிலைநாட்டியுள்ளனர்.

புதுக்கோட்டைமாவட்டம்கறம்பக்குடிபகுதியைச் சேர்ந்தநிறைமாதகர்ப்பிணிநிவானிதாவுக்குதிடீரென கடுமையான பிரசவ வலி ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அவரது குடும்பத்தினர் உடனடியாக 108 அவசர ஆம்புலன்ஸ் சேவைக்கு தகவல் அளித்தனர். தகவலின் பேரில் விரைந்து வந்த ஆம்புலன்ஸ், கர்ப்பிணியை ஏற்றிக்கொண்டு அரசு ஆஸ்பத்திரிக்கு விரைந்தது.

ஆஸ்பத்திரிக்கு செல்லும் வழியிலேயே நிவானிதாவுக்கு பிரசவ வலி மிகத் தீவிரமடைந்தது. வாகனத்தை மேற்கொண்டு ஓட்டினால் ஆபத்து என்பதை உணர்ந்த ஊழியர்கள், ஆம்புலன்ஸை வழியிலேயேபாதுகாப்பானஒருஇடத்தில்நிறுத்தினர். தொடர்ந்து, மருத்துவ உதவியாளர் முத்துச் செல்வம் அவசரப் பிரசவம் பார்க்கும் பணிகளில் ஈடுபட்டார்.

ஓட்டுநர்பாலமுருகன்உரியமுறையில்தேவையான உதவிகளைச் செய்ய, மருத்துவ உதவியாளரின் சாதுரியமான மற்றும் பாதுகாப்பான சிகிச்சையின்



பலனாக நிவானிதாவுக்கு ஆம்புலன்ஸிலேயே அழகான பெண் குழந்தை சுகப்பிரசவமாகப் பிறந்தது.

பிரசவம் முடிந்ததைத் தொடர்ந்து, தாயும் சேயும் உடனடியாக அருகில் உள்ள அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. தாயும் குழந்தையும் முழு ஆரோக்கியத்துடன் நலமுடன் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சரியான நேரத்தில் பதற்றமின்றி செயல்பட்டு, 2 உயிர்களைக் காப்பாற்றிய ஆம்புலன்ஸ் மருத்துவ உதவியாளர் முத்துச் செல்வம் மற்றும் ஓட்டுநர் பாலமுருகன் ஆகிய இருவரின் அர்ப்பணிப்புமிக்க சேவைக்கு பொதுமக்களும் மருத்துவத்துறை அதிகாரிகளும் தங்களது பாராட்டுகளைத் தெரிவித்து வருகின்றனர்.

# டம்மி முதல்அமைச்சர், கோமாளி ஆட்சியாளர்கள் உதயநிதி ஸ்டாலின் கடும் விமர்சனம்

சென்னை, அக்.7

செவிலியர்களின் மீது தாக்குதல் நடத்திய டம்மி முதல்அமைச்சரின் அரசை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இது குறித்து, அவர் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:

பணி நிரந்தரம் சம வேலைக்குச் சம ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராடும் செவிலியர்கள் மீது காவல்துறையினரை ஏவி கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தி இருக்கும் இந்த டம்மி முதல் அமைச்சரின் அரசை வன்மையாக கண்டிக்கிறேன்.

எதிர்க்கட்சியாக இருந்த போது, ஆட்சிக்கு வந்த முதல் நாளிலேயே செவிலியர்களை பணி நிரந்தரம் செய்வோம் என்று சொன்ன இன்றைய கோமாளி ஆட்சியாளர்கள், இன்றைக்கு செவிலியர் போராட்டத்திற்கு முதல் ஆளாக காவல்துறையை அனுப்பி அராஜகம் செய்கின்றனர்.

ஒருபக்கம், போராட்டக்களத்தில் சிறிய இடத்தில் செவிலியர்களை அடைப்பது மின்சாரத்தை நிறுத்துவது உயிர் வேணுமா வேண்டாமா என்று மிரட்டுவது என அத்துமீறும் இந்த ஆட்சியாளர்கள் மறுப்பக்கம், *Abusive Warriors* மூலம்



செவிலியர்களையும் அவர்களின் போராட்டத்தையும் கொச்சைப்படுத்துவது அநாகரிகத்தின் உச்சம்.

செவிலியர்கள் மீது சிறு கீறல் விழுந்தாலும் பொறுக்க மாட்டோம் என அன்றைக்கு *punch dialog* பேசிவிட்டு, இன்றைக்கு போராடும் செவிலியர்களை மட்டுமின்றி அவர்களின் குழந்தைகள் மீது கூட தாக்குதல் நடத்துவது வெட்கக்கேடு. குழந்தைகளைத் தாக்குவதற்கு பெயர் என்ன தாய்மாமன் தடியடி திட்டமா?

பெட்டி வேட்பாளரின் போலிக் கண்ணீரை துடைப்பதற்காக நீளும் முதல்வரின் கரங்கள், உயிர்காக்கும் செவிலியர்களின் உண்மைக் கண்ணீரைத் துடைக்க மறுப்பது ஏன்?

செவிலியர்கள் மீதான அடக்குமுறையை உடனே நிறுத்தி, அவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும். அவர்களின் கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென இந்த அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பணி நிரந்தரம் மற்றும் ஊதிய உயர்வு கோரி திருச்செங்கோட்டில் தூய்மைப் பணியாளர்கள் போராட்டம்

நாமக்கல், அக். 7

நாமக்கல்மாவட்டம்,திருச்செங்கோடுநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள், தங்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று தங்களது பணிகளை முற்றிலுமாக புறக்கணித்து அண்ணா சிலை முன்பு திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு நகராட்சியில் நீண்ட காலமாக பணியாற்றி வரும் ஒப்பந்த தூய்மைப் பணியாளர்கள் தங்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்றும் விலைவாசி உயர்வுக்கு ஏற்ப தங்களுக்கு ஊதிய உயர்வு வழங்கிட வேண்டும் என்பதை முதன்மை கோரிக்கைகளாக முன்வைத்தனர். மேலும்இன்று(செவ்வாய்க்கிழமை) நூற்றுக்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் அண்ணா சிலை முன்பு திரண்டு வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தின் காரணமாக நகராட்சியின் பல்வேறு வார்டுகளில் அன்றாட தூய்மைப் பணிகள் மற்றும் குப்பை சேகரிக்கும் பணிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. நகராட்சி நிர்வாக அதிகாரிகள் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து,



போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பணியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

பணியாளர்கள் தங்களது கோரிக்கைகளுக்கு முறையான தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தை கைவிடப் போவதில்லை என திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர். இந்த பரபரப்பான சூழலால் திருச்செங்கோடு அண்ணா சிலை பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிப்பும், பரபரப்பும் நிலவியது.

# பணம் கொடுக்காமல் தவெக வெற்றி பெறும் அமைச்சர் விஜய் பாலாஜி பேட்டி

சென்னை, அக். 7

தவெக பணம் கொடுத்து ஓட்டு வாங்கியதாக சரித்திரம் இல்லை என அமைச்சர் விஜய் பாலாஜி பேட்டி அளித்துள்ளார்.

தமிழகத்தில் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய தொகுதிகளில் இன்று இடைத்தேர்தல் நடைபெற்று வருகிறது. ஓட்டுக்கு பணம் கொடுப்பதாகதவெக மீது பல்வேறு விமர்சனங்கள் எழுந்து வரும் நிலையில், இதனை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ம. விஜய் பாலாஜி மறுத்துள்ளார். இதுதொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இடைத்தேர்தல் என்றால் திருமங்கலம் பார்முலா என்று மக்கள் அனைவருக்கும் தெரியும். ஆனால் அதை உடைத்து, இந்த இடைத்தேர்தலில் ஒரு ரூபாய்



கூட பணம் கொடுக்காமல், ஆளுங்கட்சியாக இருந்து மிகப்பெரிய வெற்றியை அடைய இருக்கிறோம். அதனால் விமர்சனம் செய்பவர்கள் செய்து கொண்டுதான் இருப்பார்கள். தவெக ஒரு ரூபாய் கூட பணம் கொடுத்து, ஓட்டு வாங்கியதாக சரித்திரம் கிடையாது. இவ்வாறு அவர் கூறினார்.

# பைக் வாங்கி கொடுக்காததால் மனவேதனை: விஷம் குடித்த வாலிபர் உயிரிழப்பு



தூத்துக்குடி, அக். 7

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் பகுதியில் தாயார் பைக் வாங்கி கொடுக்காததால் மனவேதனையில் விஷம் குடித்த வாலிபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் அருகே உள்ள ஆறுமுகமங்கலம் புதுநகரைச் சேர்ந்த விநாயகர் மகன் பொன்மாரீஸ் (வயது 26). இவர் தனது தாயாரிடம் பைக் வாங்கித் தரும்படி கேட்டாராம். அதற்கு தாயார் தற்போது பண வசதி இல்லை, பின்னர் வாங்கி தருகிறேன் என்று கூறியுள்ளார். இதனால் இருவருக்கும் ஏற்பட்ட தகராறில்மனமுடைந்தபொன்மாரீஸ்கலைக்கொல்லி மருந்தை குடித்து வீட்டில் மயங்கி கிடந்தாராம். இதைப் பார்த்த குடும்பத்தினர் அவரை மீட்டு தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சேர்ந்தனர். அங்கு சிகிச்சை பலனளிக்காமல் நேற்று இரவு உயிரிழந்தார். இந்த சம்பவம் குறித்து ஏரல் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நான் அந்த மாதிரி எல்லாம் பேசவில்லை... வைரல் வீடியோ குறித்து சத்தியபாமா விளக்கம்

தாராபுரம், அக். 7

மதுராந்தகம், தாராபுரத்தில் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு காலை 7 மணியில் இருந்து தொடங்கி நடைபெற்று வருகிறது. இரண்டு தொகுதி மக்களும் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்களது ஜனநாயக கடமையை ஆற்றி வருகின்றனர்.

தாராபுரம் தொகுதியில் தவெக சார்பில் போட்டியிடும் சத்யபாமா மதுக்கம்பாளையம் வாக்குச்சாவடியில் தனது வாக்கினை பதிவு செய்தார். அதன்பின்னர் சத்யபாமா செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவரிடம் கடந்த தேர்தலில் ரூ.31 கோடி செலவு செய்ததாக கூறும் வகையில் வைரல் வீடியோ குறித்து கேள்வி எழுப்பினர்.

அதற்கு விளக்கம் அளித்து கூறுகையில், "நான் அந்த மாதிரி எல்லாம் பேசவில்லை. அந்த வீடியோவில் இருப்பது அனைத்துமே சித்தரிக்கப்பட்டது. இந்தக் காணொலியை பரப்பியது யார் என்று தெரியவில்லை. எனக்கு வெற்றி வாய்ப்பு அதிகமாக இருப்பதால்



இதுபோன்ற வீடியோக்களை பரப்புகிறார்கள்.

இந்த வீடியோ தேர்தல் வாக்குப்பதிவில் எதிரொலிக்காது. மக்கள் தெளிவாக உள்ளனர். இந்த வீடியோ குறித்து தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்கப்படும். தாராபுரம் தொகுதியில் நான் ஒரு லட்சம்வாக்குகள்வித்தியாசத்தில்வெற்றிபெறுவேன். இவ்வாறு அவர் கூறினார்.

# கோவில்பட்டியில் கறிக்கடை வியாபாரிக்கு கத்திக்குத்து: வாலிபர் கைது



தூத்துக்குடி, அக். 7

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் கறியில் எலும்பு அதிகம் இருந்ததாகக் கூறி கறிக்கடை வியாபாரியை கத்தியால் குத்தி கொலை மிரட்டல் விடுத்த நபரை போலீசார் கைது செய்தனர்.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி கதிரேசன் கோவில் தெருவைச் சேர்ந்த கணேசன் மகன் ஜெயபிரகாஷ் (வயது 51). இவர் தனது வீட்டின் முன்பகுதியில் கறிக்கடை நடத்தி வருகிறார். கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜெயபிரகாஷ்தனதுகடைமுன்னர் நின்று கொண்டிருந்தபோது, கோவில்பட்டி வீரவாஞ்சிநகர் 2வது தெருவைச் சேர்ந்த மாரியப்பன் மகன் பொன்னுத்துரை என்பவர் பைக்கில் அங்கு வந்துள்ளார்.

தான் ஏற்கனவே வாங்கி சென்ற கறியில் எலும்பு அதிகமாக இருந்ததாகக் கூறி ஜெயபிரகாஷிடம் பொன்னுத்துரை வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். வாக்குவாதம் முற்றியதில் ஆத்திரமடைந்த பொன்னுத்துரை, தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஜெயபிரகாஷை கொடூரமாக தாக்கி, அவருக்கு கொலை மிரட்டல் விடுத்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றார்.

இந்த தாக்குதலில் படுகாயமடைந்த ஜெயபிரகாஷ் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இச்சம்பவம் குறித்து ஜெயபிரகாஷ் அளித்த புகாரின்பேரில், கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி, தலைமறைவாக இருந்த பொன்னுத்துரையை கைது செய்தனர்.

# செவிலியர்கள் மீது காவல்துறை நடவடிக்கை: எடப்பாடி பழனிசாமி கண்டனம்



சென்னை, அக். 7

கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி அறவழியில் போராட்டம் நடத்திய செவிலியர்கள் மீது இன்றைய தவெக அரசின் காவல்துறை அரங்கேற்றியுள்ள அராஜகம் என்பது கொடூரத்தின் உச்சம்.

"பாசிசம், பாயாசம்" என்று *Rhyming* வசனங்கள் பேசிய முதல்வரின் கையில் இருக்கும் காவல்துறை, உயிர் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள செவிலியர்கள் மீது நடத்தியுள்ள பாசிச அக்கிரமத்தை எப்படி இந்த *Reels* முதல்அமைச்சர் *Justify* செய்வார்?

ஆட்சிக்கு வருவது முன், இதே செவிலியர்கள் முன் நின்று உங்கள் கட்சி நிர்வாகிகள், இன்றைக்கு அமைச்சராக இருப்பவர்கள் பேசியது எல்லாம் நினைவில் இருக்கிறதா? ஆட்சிக்கு முன் ஒரு பேச்சு, ஆட்சிக்கு பின் அதற்கு மாறான செயல் என்பது தான் மாற்றமா? தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் பரவுவது குறித்து மக்கள் பிரச்சனையை சுட்டிக்காட்டினால் கூட ஏற்றுக்கொள்ள மனமின்றி அவதூறுகளை அள்ளி வீசும் நபராக இருக்கிறார் இன்றைய சுகாதாரத் துறை அமைச்சர்.

தனதுதுறையைச்சார்ந்தசெவிலியர்கள்போராடுவது குறித்து ஒரு வார்த்தை பேசினாரா? செவிலியர்களிடம் வந்து பேச்சுவார்த்தை நடத்துவதை விட அப்படி என்ன பெரிய வேலை இருக்கிறது இந்த அமைச்சருக்கு? போராடும் இடத்தில் மின்சாரத்தை துண்டிப்பது, பேச்சுவார்தை எனக் கூறி அழைத்து சென்று கைது செய்வது என மிகவும் கீழ்த்தரமாக ஒரு போராட்டத்தை அணுகியுள்ள இன்றைய ஆச்சரியக்குறி அரசுக்கு எனது கடும் கண்டனம்.

கைது செய்யப்பட்டுள்ள செவிலியர்கள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட்டு, அவர்கள் மீது எந்த வழக்கும் பதியாமல் இருப்பதை உறுதி செய்து, ஜனநாயக ரீதியாக அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும் என இந்த அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குலசை முத்தாரம்மன் கோவிலில் அமைச்சர்கள் ரமேஷ், ஸ்ரீநாத் சாமி தரிசனம்




தூத்துக்குடி, அக். 7

குலசை முத்தாரம்மன் கோவிலில் அமைச்சர்கள் ரமேஷ், ஸ்ரீநாத் சாமி தரிசனம் செய்தனர்.

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன்பட்டினத்தில் உலகப்புகழ்பெற்ற ஞானமூர்த்தீஸ்வரர் சமேத முத்தாரம்மன் கோவில் உள்ளது. முத்தாரம்மன் கோவிலில் நடைபெறும் தசரா திருவிழா உலகப்புகழ்பெற்றதாகும். அந்த வகையில் நடப்பு ஆண்டு தசரா திருவிழா வரும் 11ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

தசரா திருவிழாவின் சிகர நிகழ்வான மகிசாசூரசம்காரம் வரும் 20ம் தேதி இரவு குலசை சிதம்ப ரேவரர் கோவில் கடற்கரை யில் நடைபெற உள்ளது. தசரா திருவிழா நெருங்கி வரும் நிலையில் விழா ஏற்பாடுகளை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஸ்ரீநாத் இன்று குலசை முத்தாரம்மன் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தனர். மேலும், தசரா திருவிழாவையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் ஏற்பாடுகளையும் அமைச்சர்கள் ஆய்வு செய்தனர்.

# குலசேகரன்பட்டினம் தசரா திருவிழா பாதுகாப்பு ஏற்பாடுகள்: நெல்லை சரக டி.ஐ.ஜி. திருநாவுக்கரசு நேரில் ஆய்வு



தூத்துக்குடி, அக். 7

தூத்துக்குடி மாவட்டம், குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன் கோவில் தசரா திருவிழாவை முன்னிட்டு, பக்தர்களுக்கு செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து நெல்லை சரக டி.ஐ.ஜி. திருநாவுக்கரசு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

உலகப் புகழ்பெற்ற குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன்கோவில்தசராதிருவிழாவைமுன்னிட்டு இம்மாதம் 10ம் தேதி காளி பூஜையும், 11ம் தேதி கொடியேற்றத்துடன் திருவிழா தொடங்குகிறது. திருவிழாவின் சிகர நிகழ்வான மகிஷாசுரசம்ஹாரம் அக்டோபர் 20ம் தேதி நள்ளிரவில் கடற்கரையில் நடைபெறவுள்ளது.

இந்த திருவிழாவில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், நாட்டின் பிற மாநிலங்களிலிருந்தும் பல லட்சம் பக்தர்கள் கலந்து கொள்ள உள்ளனர். இந்த நிலையில் தசரா திருவிழா முன்னேற்பாடுகள் குறித்து திருநெல்வேலி சரக டி.ஐ.ஜி. திருநாவுக்கரசு ஆய்வு செய்தார்.

பக்தர்கள் வந்து செல்லும் வழித்தடங்கள், தீச்சட்டி ஏந்தி வரும் பக்தர்களுக்கான பாதைகள், வாகனங்கள் நிறுத்துமிடம், கோவில் வளாகப் பகுதி, தற்காலிக பேருந்து நிலையங்கள், சூரசம்ஹாரம் நடைபெறும் கடற்கரை பகுதி மற்றும் பக்தர்களுக்கான கூட்ட நெரிசல் மேலாண்மை பாதுகாப்பு ஏற்பாடுகளை நேரில் பார்வையிட்டுப் ஆய்வு செய்த டி.ஐ.ஜி., பணிகளை தடையின்றி மேற்கொள்வது குறித்து துறை சார்ந்த போலீசாருக்கு பல்வேறு முக்கிய அறிவுரைகளை வழங்கினார்.

ஆய்வின்போது தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. சிவபிரசாத், ஏ.டி.எஸ்.பி. சகாயஜோஷ், திருச்செந்தூர் டி.எஸ்.பி. மகேஷ்குமார், போலீஸ் இன்ஸ்பெக்டர் இன்னோஸ்குமார், போக்குவரத்து போலீஸ் இன்ஸ்பெக்டர்சுனைமுருகன், சப்இன்ஸ்பெக்டர்கள் முகேஷ் அரவிந்த், வேல்முருகன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# கவுரவ விரிவுரையாளர்களுக்கு ரூ.5,000 ஊதிய உயர்வை உடனே வழங்குக: அன்புமணி ராமதாஸ்



சென்னை, அக். 7

கவுரவ விரிவுரையாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட ரூ.5000 ஊதிய உயர்வைஅரசுஉடனேவழங்கவேண்டும் என்று பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாட்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணியாற்றும் கவுரவ விரிவுரையாளர்களுக்கு தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட ரூ.5,000 ஊதிய உயர்வு செப்டம்பர் மாத ஊதியத்தில் வழங்கப்படவில்லை. சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பை ஒரு மாதமாகியும் அரசு செயல்படுத்தாதது ஏமாற்றமளிக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள 181 அரசு கலை அறிவியல் கல்லூரிகள், 6 அரசு கல்வியியல் கல்லூரிகளில் 8,741 கவுரவ விரிவுரையாளர்கள் பணியாற்றி வருகின்றனர். 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வரும் அவர்கள், தங்களுக்கு பணி நிலைப்பு வழங்கப்பட வேண்டும்; அதுசாத்தியமாகும்வரைபல்கலைக்கழக மானியக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட ரூ.50 ஆயிரம் மாத ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று கோரி வருகின்றனர்.

சட்டப்பேரவையில் கடந்த ஆகஸ்ட் 24ஆம் தேதி நடைபெற்ற உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய பா.ம.க. உறுப்பினர் சிவக்குமார், கவுரவ விரிவுரையாளர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார். அதற்கு விடையளித்த உயர்கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதன், கவுரவ விரிவுரையாளர்களின் வஊதியம் ரூ.30 ஆயிரத்திலிருந்து ரூ.35 ஆயிரமாக உயர்த்தப்படும் என்று அறிவித்தார். அதன்பின் ஆகஸ்ட், செப்டம்பர் எனஇருமாதங்களுக்கானஊதியம்வழங்கப்பட்டுள்ள நிலையில், அமைச்சரால் அறிவிக்கப்பட்டவாறு ஊதிய உயர்வு நடைமுறைப்படுத்தப்படவில்லை.

20 ஆண்டுகளுக்கு முன் மாதம் ரூ.6000 என்ற ஊதியத்தில் பணியில் சேர்ந்த அவர்கள், பணி செய்ய வாய்ப்புள்ள காலத்தில் பெரும்பகுதியை கவுரவ விரிவுரையாளர்களாகவே கழித்து விட்டனர். அவர்களுக்கு கடந்த காலங்களில் பணிப்பாதுகாப்போ, சமூகப் பாதுகாப்போ வழங்கப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் அவர்களுக்கு ஊதியம் கூட வழங்கப்படுவதில்லை. இத்தகைய நிச்சயமற்ற சூழலிலேயே பெரும் பகுதி பணிக்காலத்தைக் கடந்து, 45 வயதைக் கடந்து விட்ட அவர்களுக்கு பணிப்பாதுகாப்பையும், சமூகப் பாதுகாப்பையும் வழங்க வேண்டியது அரசின் கடமை. அதை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும்.

கவுரவ விரிவுரையாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்ற முடியாதது அல்ல... அவர்கள் கோருவது சலுகைகளும் அல்ல. அவை அனைத்தும் சாத்தியமாகக் கூடிய உரிமைகள் தான். கவுரவ விரிவுரையாளர்களின் ஊதியம் தொடர்பாக 28.01.2019ஆம் நாள் ஆணையிட்ட பல்கலைக்கழக மானியக் குழு, அவர்களுக்கு ஒரு பாடவேளைக்கு ரூ.1500 வீதம் மாதத்திற்கு அதிகபட்சமாக ரூ.50000 மதிப்பூதியம் வழங்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தது.

கவுரவவிரிவுரையாளர்கள்தொடர்பானஇன்னொரு வழக்கில்தீர்ப்பளித்தஉச்சநீதிமன்றம், சமவேலைக்கு சம ஊதியம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் அரசு கல்லூரி நிரந்தர விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் அடிப்படை ஊதியமான ரூ.57,700 வழங்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டது. இந்த ஆணைகளை அரசு செயல்படுத்தியிருந்தாலே கவுரவ விரிவுரையாளர்களின் வாழ்க்கையில் வசந்தம் பிறந்திருக்கும். ஆனால், கடந்த 8 ஆண்டுகளாக இந்த ஆணைகளை தமிழகத்தை ஆண்ட அரசுகள் செயல்படுத்தவில்லை.

இந்தியாவில் பல மாநிலங்களில் கவுரவ விரிவுரையாளர்களுக்குபல்கலைக்கழகமானியக்குழு பரிந்துரைத்த ஊதியம் வழங்கப்படுகிறது. கேரளம், பஞ்சாப், தில்லி ஆகிய மாநிலங்களில் ரூ.50,000, பஞ்சாப் பாநிலத்தில் ரூ.57,700, புதுச்சேரியில் ரூ.40,000 வீதம் கவுரவ விரிவுரையாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே கவுரவ விரிவுரையாளர்களுக்கு மிகக்குறைந்த ஊதியம் வழங்கும் மாநிலம் தமிழகம் தான். பிற மாநிலங்களால் இந்த அளவு ஊதியம் வழங்குவது சாத்தியமாகும் போது, தமிழக அரசால் மட்டும் இது சாத்தியமாகாதா? ஆட்சியாளர்களுக்கு அதற்கான மனம் இல்லாதது தான் இந்த சிக்கலுக்கு காரணம்.

கவுரவ விரிவுரையாளர்களுக்கு உடனடி நீதியாக, சட்டப்பேரவையில் வாக்குறுதி அளிக்கப்பட்ட வாறு, அவர்களின் ஊதியம் ரூ.35 ஆயிரமாக உயர்த்தப்பட வேண்டும். அடுத்த ஓராண்டுக்குள் பல்கலைக்கழக மானியக் குழு பரிந்துரைத்தவாறு அவர்களின்ஊதியம்ரூ.50ஆயிரமாகஅதிகரிக்கப்பட வேண்டும். அத்துடன் மே மாதத்தையும் சேர்த்து ஆண்டின்12மாதங்களும்ஊதியம்வழங்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும். வருங்கால வைப்பு நிதி, மருத்துவக் காப்பீடு, பெண் கவுரவ விரிவுரையாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு, பணி ஓய்வின் போது ரூ.25 லட்சம் பணிக்கொடை உள்ளிட்டகவுரவவிரிவுரையாளர்களின்4அனைத்துக் கோரிக்கைகளையும் தமிழக அரசு விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்து கிறேன்.

# செவிலியர்களின் முதுகில் குத்தும் தவெக அரசு: மு.க.ஸ்டாலின் சாடல்



சென்னை, அக். 7

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

கண்துடைப்புக்கு வழங்கிய வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு, முதுகில் குத்தும் த.வெ.க. அரசின் துரோகத்திற்குச் செவிலியர்கள்தான் தற்போதைய இரையா?.. பணி நிரந்தரம், பணிப் பாதுகாப்பு, சம வேலைக்குச் சம ஊதியம் உள்ளிட்ட தங்களது வாழ்வாதார உரிமைகளுக்காக அறவழியில் போராடிய செவிலியர்களைக் காவல்துறையைக் கொண்டு கைது செய்த த.வெ.க. அரசின் அராஜக நடவடிக்கைக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போராடும் செவிலியர்களுடன் அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்திட மனம் வராத துரோக த.வெ.க. அரசுக்கு, ஈவு இரக்கமின்றி அவர்களைக் கைது செய்ய மட்டும் எப்படி மனம் வந்ததோ?. போராடிய செவிலியர்களின்பிரதிநிதிகளைப்பேச்சுவார்த்தைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி கைது செய்ததாக அவர்களது சட்ட ஆலோசகரே குற்றம்சாட்டியிருக்கிறார். தொடர்ந்து, போராட்டக் களத்திலிருந்த செவிலியர்களும் காவல்துறையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்க்கட்சியாக இருக்கும்போது போராட்டக் களத்திற்குச் சென்று ஆதரவு; தேர்தல் வந்தபோது பணி நிரந்தரம் செய்வோம் என்று வாக்குறுதி; ஆட்சிக்கு வந்ததும் அதே கோரிக்கையை முன்வைத்தால் காவல்துறை நடவடிக்கை. முரண்பாட்டு மூட்டையாக விளங்கும் முதல்அமைச்சர்விஜய்யும், அவரதுநிர்வாகத்திறனற்ற துக்ளக் நடவடிக்கைகளுக்கு முட்டுக் கொடுக்கும் அதிமேதாவி அமைச்சர்களும் இப்போது என்ன சொல்லப் போகிறார்கள்?

போராட்டக் களத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையிலும், செல்போன் டார்ச் வெளிச்சத்தில் தங்களது போராட்டத்தைத் தொடர்ந்த செவிலியர்களை இரவோடு இரவாக வலுக்கட்டாயமாகக் கைது செய்ததுதான் த.வெ.க. கூறும் 'மாற்றமா'? இதுதான் அவர்கள் போற்றும் ஜனநாயகமா?

போராடிய செவிலியர்களை நோக்கி பெண் காவல் அதிகாரி ஒருவரே விரலை உயர்த்தி "வேண்டாம் உங்க உயிர் முக்கியம்" என மிரட்டியதுதான் ஜனநாயக வில்லனின் குரலா என்பதை காவல்துறைக்கு பொறுப்பு வகிக்கும் முதல்அமைச்சர் விளக்குவாரா? அல்லது, செவிலியர்களை மிரட்டி குண்டுகட்டாகக் கைது செய்த பெண் காவலர்களின் செயலை "சிங்கப்பெண் *in action*" என *Reels* செய்து தனது *virtual abuser*கள் மூலம் *trend* செய்து விளம்பரம் தேடுவாரா?. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நிலம் வாங்கித் தருவதாக கூறி ரூ.34 லட்சம் மோசடி: வாலிபர் கைது




நாகர்கோவில், அக். 7

நாகர்கோவிலில் நிலம் வாங்கித் தருவதாக கூறி பெண்ணிடம் ரூ.34 லட்சம் மோசடி செய்தவரை போலீசார் கைது செய்தனர்.

காஞ்சீபுரம் மாவட்டம் குளப்பாக்கம், ஊனமாஞ்சேரியில் வசித்து வருபவர் ஜெயந்தி (வயது 58). இவர் நாகர்கோவிலில் உள்ள மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் ஒரு புகார் மனு அளித்தார். அதில் கூறியிருப்பதாவது:

எனக்கு சொந்த ஊர் குமரி மாவட்டம் ஆகும். எனது மகள் சென்னையில் உள்ள வங்கியில் வேலை பார்த்து வருகிறார். எனது மகளுக்கு வீடு கட்டுவதற்காக நாகர்கோவிலில் நிலம் பார்த்து வந்தேன். அப்போது பால்பண்ணை அருகே நடுக்காடு பகுதியை சேர்ந்த காந்தி (43) என்பவரின் அறிமுகம் கிடைத் தது.

அவர், கட்டையன்விளையில் தனக்கு சுமார் 11 சென்ட் காலி மனை இருப்பதாகவும், அதை குறைந்த விலைக்கு வாங்கி தருவதாகவும் கூறினார். பின்னர் 11 சென்ட் நிலத்துக்கு ரூ.1.38 கோடி கொடுத்தால் நிலத்தை கிரயம் செய்து தருவதாக கூறினார். இதை நம்பிய நான் முதற்கட்டமாக ரூ.34 லட்சம் கொடுத்தேன்.

இதைத் தொடர்ந்து நிலத்தை நேரில் பார்க்க வந்தபோது அந்த நிலம் காந்திக்கு சொந்தமானது இல்லை என்பது தெரிய வந்தது. மேலும் சம்பந்தப்பட்ட நிலத்தின் உரிமையாளர், அந்த நிலத்தை வேறு ஒருவருக்கு விற்று விட்டதும் தெரியவந்தது. இதனால் ஏமாற்றம் அடைந்த நான் பணத்தை திருப்பிக்கேட்டேன். ஆனால் அவர் தரவில்லை. எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்தபுகார்மனுமீதுவிசாரணைநடத்திநடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட குற்றப்பிரிவுக்கு, சூப்பிரண்டு அன்சுல் நாகர் உத்தரவிட்டார். அதன்பேரில் குற்றப்பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் சாம் சுந்தர் தலைமையிலான போலீசார் வழக்குப்பதிந்து காந்தியை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# சென்னையில் பைக் ரேஸ், விபத்துகளை தடுக்க 13 தனிப்படைகள் அமைப்பு



சென்னை, அக். 7

சென்னையில் பைக் ரேஸ் மற்றும் அதிவேகமாக வாகனங்களை ஓட்டுவதால் ஏற்படும் விபத்துகளை தடுக்க போலீசார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இதன் ஒரு பகுதியாக, நகரில் 13 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னையில் 2 நாட்களுக்கு முன்புகோடம்பாக்கம், நுங்கம்பாக்கம், கோட்டூர்புரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நள்ளிரவு நேரத்தில் 60க்கும் மேற்பட்ட 'பைக் ரேஸ் ரோமியோக்கள்' அட்டகாசத்தில் ஈடுபட்டனர்.

கோட்டூர்புரத்தில் மின்னல் வேகத்தில் சென்ற இருசக்கரவாகனம் ஒன்று மேம்பால தடுப்புச்சுவரில் மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட மெக்கானிக் ஸ்ரீகுகன் உயிரிழந்தார். இந்த சம்பவம் சென்னையில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதைத்தொடர்ந்து, பைக்ரேசில்ஈடுபட்டதாக கூறப்படும் 16 பேரை போலீசார் கைது செய்தனர். மேலும், பைக் ரேஸ் மற்றும் அதிவேக வாகன ஓட்டத்தை கட்டுப்படுத்தும் வகையில் கண்காணிப்பை தீவிரப்படுத்த போலீசார் முடிவு செய்துள்ளனர்.

# ஓட்டுநர் போல உடை அணிந்து பேருந்தை இயக்க முயன்ற போதை ஆசாமி...!



நாகை, அக். 7

நாகையில் ஓட்டுநர் போல உடை அணிந்து பேருந்தை இயக்க முயன்ற போதை ஆசாமியால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நாகை புதிய பேருந்து நிலையத்தில் நேற்று இரவு அரசு விரைவு பேருந்து ஒன்று புறப்படுவதற்கு தயார் நிலையில் இருந்தது. அதில் இருந்த ஓட்டுநரும், நடத்துனரும் பேருந்தை சாவியுடன் நிறுத்தி விட்டு டீ குடிப்பதற்காக சென்றனர்.

இந்த நிலையில் அங்கு வந்த மர்ம நபர் ஒருவர் ஓட்டுநர் உடையை அணிந்து பேருந்தில் ஏறி அங்கிருந்து இயக்கி சென்றுள்ளார். தூரத்தில் இருந்து இதனைப்பார்த்தஅரசுவிரைவுபேருந்தின்ஓட்டுநரும், நடத்துனரும்விரைந்துசென்றுபேருந்தைவழிமறித்து நிறுத்தினர். பின்னர், பேருந்தில் இருந்த மர்ம நபரை விசாரித்துள்ளனர். பேருந்தை ஓட்டி சென்ற மர்ம நபர் போதையில் இருந்துள்ளார். இது குறித்து ஓட்டுநர்கள் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் அந்த மர்ம ஆசாமியை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆம்பூர் அருகே +2 மாணவனை விடுவிக்க ரூ.10,000 லஞ்சம்: காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் பணியிடை நீக்கம்



திருப்பத்தூர், அக். 7

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அருகே பள்ளி மாணவனை வழக்கில் இருந்து விடுவிக்க ரூ.10,000 லஞ்சம் கேட்ட உமராபாத் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ஒருவர் உடனடியாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த ராமாபுரம் பகுதியில் உள்ள ஒரு விவசாய நிலத்தில் 5க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில் அந்த பகுதியைச் சேர்ந்த மக்கள் பல ஆண்டு காலமாக பயன்படுத்தி வரும் பொதுவழி தொடர்பாக அங்கு வசிக்கும் மார்க்கபந்து மற்றும் மணிமேகலை ஆகியோரது குடும்பத்தினரிடையே இடத் தகராறு ஏற்பட்டது. இந்த தகராறு முதலில் வாக்குவாதமாகத் தொடங்கி, பின்னர் இரு தரப்பினருக்கும்இடையேகைகலப்பாகமாறியுள்ளது.

இதுகுறித்து இரு தரப்பினரும் உமராபாத் காவல் நிலையத்தில்புகார்அளித்தனர். இதையடுத்து, சிறப்பு உதவி ஆய்வாளர் மதியழகன் சம்பவ இடத்திற்கு விசாரணை நடத்த சென்றுள்ளார். அப்போது வீட்டில் சம்பந்தப்பட்ட பெண் மணிமேகலை இல்லாததால், அவரது மகனான +2 படிக்கும் பள்ளி மாணவனை மதியழகன் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தியுள்ளார்.

விசாரணைக்குப் பின், அந்த மாணவனைவழக்கில்இருந்துவிடுவிக்க வேண்டும் என்றால் ரூ.10,000 லஞ்சம் தர வேண்டும் என மதியழகன் கட்டாயப்படுத்தியுள்ளார்.

இதனால்அதிர்ச்சியடைந்தமாணவனின்பெற்றோர், இதுகுறித்து திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (எஸ்பி) அக்ஷய் அணில் வாக்ரேவிடம் புகார் அளித்தனர். புகாரின் பேரில் நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணையில் லஞ்சம் கேட்டது உறுதியானதை அடுத்து, நேற்று (திங்கட்கிழமை) சிறப்பு உதவி ஆய்வாளர் மதியழகனை முதலில் ஆயுதப்படைக்கு மாற்றம் செய்து எஸ்பி உத்தரவிட்டார். தொடர்ந்து நடத்தப்பட்ட தீவிர விசாரணைக்கு பின், அவர் உடனடியாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தின கனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

07.10.2026

# மேட்டூர் அணை நீர்மட்டம் 70.62 அடியாக குறைந்தது



சேலம், அக். 7

மேட்டூர் அணைக்கு நேற்று காலை 2,121 கனஅடியாக இருந்த நீர்வரத்து, தற்போது 1,195 கனஅடியாக சரிந்துள்ளது.

காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து தொடர்ச்சியாக அதிகளவில் தண்ணீர் திறந்து விடப்படுவதால், அணையின் நீர்மட்டம் சரிந்து வருகிறது. இன்று காலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 70.62 அடியாக உள்ளது. அணையில் நீர் இருப்பு 33.23 டி.எம்.சி.யாக உள்ளது.

டெல்டா மாவட்டங்களின் பாசன தேவைக்காக மேட்டூர் அணையில் இருந்து தொடர்ந்து வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. நீர்வரத்து குறைந்துள்ள நிலையில், அணையின் நீர்மட்டமும் சரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# நிலப்பிரச்சினைக்கு தீர்வு: கலெக்டருக்கு சீர்வரிசை கொடுத்து நன்றி தெரிவித்த முஸ்லிம் பெண்கள்



ராமநாதபுரம், அக். 7

பல ஆண்டுகளாக இருந்த நிலப்பிரச்சினைக்கு தீர்வு கிடைத்ததால் ராமநாதபுரம் மாவட்ட கலெக்டருக்கு சீர்வரிசை கொடுத்து முஸ்லிம் பெண்கள் நன்றி தெரிவித்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையை அடுத்த காஞ்சிரங்குடி பகுதியில் நீண்ட காலமாக அளவீடு செய்யப்படாமல் இருந்து வந்த நிலம் தொடர்பாக, தனியார் அமைப்பு மற்றும் அப்பகுதி மக்கள் சார்பில் மாவட்ட கலெக்டரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து மாவட்ட கலெக்டர் சிவகுரு பிரபாகரன், சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு உடனடியாக விசாரணை நடத்தி நிலத்தை முறையாக அளவீடு செய்து தீர்வுகாண உத்தரவிட்டார். அதன்பேரில்

கீழக்கரை தாசில்தார் தலைமையில் வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் நில அள வையர்கள் நேரடியாக சென்று நிலத்தை ஆய்வு செய்து அள வீடு செய்து, பல ஆண்டுகளாக இருந்து வந்த பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதையடுத்து மாவட்ட நிர்வாகத்துக்கும், சம்பந்தப்பட்ட வரு வாய்த்துறை அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் 50க்கும் மேற்பட்ட முஸ்லிம் பெண்கள் பூக்கள், பழங்கள், காய்கறிகள், இனிப்பு வகைகள் உள்ளிட்ட பொருட்களை சீர்வரிசையாக தட்டுகளில் எடுத்து வந்து மாவட்ட கலெக்டரிடம் வழங்கி நன்றி தெரிவித்தனர்.

மக்களால் அன்புடன் வழங்கப்பட்ட சீர்வரிசை பொருட்களை மாவட்ட கலெக்டர் சிவகுரு பிரபாகரன் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டார். மேலும், பொதுமக்களிடம் உங்களது கோரிக்கைகளை சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு பரிசீலித்து உரிய தீர்வுகாண மாவட்டநிர்வாகம்தொடர்ந்துநடவடிக்கை மேற்கொள்ளும் என தெரிவித்தார்.

# தூத்துக்குடியில் கொலை வழக்கு குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை



தூத்துக்குடி, அக்.7

தூத்துக்குடி தெற்கு காவல் நிலைய கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்து மாவட்ட கூடுதல் நீதிமன்றம்I தீர்ப்பளித்துள்ளது.

தூத்துக்குடி தெற்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பாளையங்கோட்டை ரோடு பகுதியில் உள்ள ஒரு பூங்கா வாசல் முன்பு கடந்த 2020ம் ஆண்டு, தூத்துக்குடி மகிழ்ச்சிபுரம் பகுதியைச் சேர்ந்த ஆவுடையப்பன் மகன் நமச்சிவாயராஜ் (வயது 55) என்பவர் முன்விரோதம் காரணமாகதகராறுசெய்துதாக்கிகொலைசெய்யப்பட்டார். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட தூத்துக்குடி மணிநகரைச் சேர்ந்த முத்துராஜ் மகன் ஆல்பர்ட் சந்திரபோஸ்(51) என்பவரை தெற்கு காவல் நிலைய போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கின் விசாரணை மாவட்ட கூடுதல் நீதிமன்றம் Iல் (ADJ) நடைபெற்று வந்த நிலையில், மேற்சொன்ன நீதிமன்ற நீதிபதி தாண்டவம் நேற்று (5.10.2026) ஆல்பர்ட் சந்திரபோஸ் என்பவரை குற்றவாளி என உறுதி செய்து, அவருக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ.10 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்.




கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பவன்குமார் க. கிரியப்பனவர் இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா இ.ஆ.ப., அவர்கள், முன்னிலையில், மழைநீர் சேகரிப்பு அவசியம் குறித்த பொதுமக்களுக்கு, விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பிரச்சார வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாநகராட்சி துணை ஆணையாளர்கள் திரு.த.குமரேசன், திருமதி.சரஸ்வதி, மாநகர தலைமைப் பொறியாளர் திரு.விஜயகுமார் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர் 06.10.2026.

# இன்றைய ராசி பலன்கள் (07.10.2026)

**மேஷம்** — தைரியத்துடன் செயல்பட்டால் தடைகள் விலகும். தொழிலில் பாராட்டு, பணவரவு அதிகரிக்கும் வாய்ப்பு.

**ரிஷபம்** — பொருளாதார ரீதியாக சாதகமான நாள். குடும்ப கருத்து வேறுபாடுகள் குறையும்.

**மிதுனம்** — புதிய முயற்சிகளில் வெற்றி. பணப் பரிவர்த்தனைகளில் மட்டும் கவனம் தேவை.

**கடகம்** — வேலை/பதவி தொடர்பாக நல்ல தகவல் வரலாம். குடும்பத்தில் அமைதி நிலவும்.

**சிம்மம்** — கௌரவம் உயரும். பொருளாதாரம் சிறப்பாக இருக்கும்; சொத்து வாங்கும் வாய்ப்பு உண்டு.

**கன்னி** — புத்திசாலித்தனமாக செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள். பணியிடத்தில் உங்கள் ஆலோசனைக்கு மதிப்பு கூடும்.

**துலாம்** — நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளின் ஆதரவு கிடைக்கும். தொழில் மற்றும் பணவரவில் முன்னேற்றம்.

**விருச்சிகம்** — உடல் சோர்வு, மன அழுத்தம் ஏற்படலாம்; ஓய்வும் அமைதியும் முக்கியம்.

**தனுசு** — அதிர்ஷ்டம் கைகூடும் நாள். தொழில் விரிவாக்கம், வெளிநாட்டு தொடர்புகளில் சாதகமான பலன்.

**மகரம்** — சந்திராஷ்டமம் என குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய முயற்சிகளில் அவசரம் வேண்டாம்; பணம் மற்றும் வாகன விஷயங்களில் கவனம்.

**கும்பம்** — எதிர்பாராத தனவரவு கிடைக்கலாம். பழைய முதலீடுகளால் லாபம் ஏற்படும் வாய்ப்பு.

**மீனம்** — கனவுகள் நனவாகும் வாய்ப்பு. வேலை மற்றும் வெளிநாட்டு வாய்ப்புகளில் நல்ல முன்னேற்றம்.

# மெட்ரோ ரெயிலில் பிரதமர் மோடி, விஜய் இணைந்து பயணம்: பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

சென்னை, அக். 7

சென்னையில் மெட்ரோ ரெயில் திட்டம் வெற்றிகரமாக இயங்கி வருகிறது. தற்போது அதன் 2ம் கட்ட பணிகள் நிறைவடைந்து திறப்புக்காக காத்திருக்கிறது. பூந்தமல்லியில் இருந்து வடபழனி வரையிலான 14.64 கி.மீ நீளமுள்ளபாதைதான், 2ம்கட்டதிட்டத்தின் முதல் செயல்பாட்டு பகுதியாகும்.

பூந்தமல்லிவடபழனி இடையேயான வழித்தடம்4 என்ற மஞ்சள் பாதையை பிரதமர் மோடி வருகிற 11ந்தேதி திறந்து வைக்க உள்ளார். இதற்காக டெல்லியில் இருந்து விமானம் மூலமாக அவர் 11ந்தேதி காலை 10.55 மணிக்கு சென்னை விமான நிலையத்தை வந்தடைகிறார்.

அங்கிருந்து அவர் பூந்தமல்லிக்கு ஹெலிகாப்டரில் செல்கிறார். காலை 11.30 மணிக்கு பூந்தமல்லி மெட்ரோ ரெயில் நிலையத்தில், பூந்தமல்லிவடபழனி இடையிலான 14.64 கி.மீ நீளமுள்ள முதல் செயல்பாட்டுப் பகுதியை கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.

பின்னர் அவர் பூந்தமல்லியில் இருந்து போரூர் வரை மெட்ரோ ரெயிலில் குறுகிய பயணத்தை மேற்கொள்வார். இந்த நிகழ்ச்சிகளில் முதல்அமைச்சர் விஜய் பங்கேற்கிறார். விஜய் முதல்அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு, பிரதமர் மோடியுடன் பங்கேற்கும் முதல் அரசு நிகழ்ச்சி இதுவாகும்.

பிரதமரின் வருகையையொட்டி சென்னையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஏற்பாடுகள் பற்றி சென்னை தலைமைச்செயலகத்தில் தலைமைச் செயலாளர் சாய்குமார் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மணிவாசன், போலீஸ் டி.ஜி.பி. மகேஷ்குமார் அகர்வால், சென்னை போலீஸ் கமிஷனர் அமல்ராஜ் உள்பட பல உயர் போலீஸ் அதிகாரிகள் பங்கேற்றனர்.

# இந்திய மகளிர் கிரிக்கெட்டில் அதிரடி மாற்றம்.... ஹர்மன்பிரீத் கேப்டன் பதவியிலிருந்து விலகல்



இந்திய மகளிர் கிரிக்கெட்டில் இன்று முக்கியமான மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஹர்மன்பிரீத் கவுர், இந்திய மகளிர் அணியின் மூன்று வடிவங்களிலும் கேப்டன் பதவியில் இருந்து விலகியுள்ளார். 2026 அக்டோபர் 6ஆம் தேதி தனது சமூக வலைதளப் பதிவின் மூலம் இந்த முடிவை அவர் அறிவித்தார். இந்த முடிவு எளிதானது அல்ல என்று ஹர்மன்பிரீத் தெரிவித்துள்ளார். ஹர்மன்பிரீத் 2022ஆம் ஆண்டு மிதாலி ராஜ் ஓய்வு பெற்ற பிறகு இந்திய அணியின் முழுநேர ஒருநாள் கேப்டனாக பொறுப்பேற்றார். அதற்கு முன்பே அவர் இந்திய அணியின் டி20 கேப்டனாகவும் செயல்பட்டு வந்தார். தற்போது மூன்று வடிவங்களிலும் கேப்டன் பொறுப்பை விட்டுவிட்டாலும், வீராங்கனையாக தனது கிரிக்கெட் பயணத்தைத் தொடர உள்ளார். ஹர்மன்பிரீத் கவுரின் கேப்டன்சி காலத்தின் மிகப்பெரிய சாதனைகளில் ஒன்று 2025 மகளிர் ஒருநாள் உலகக் கோப்பையை இந்தியா வென்றது ஆகும். இந்திய மகளிர் கிரிக்கெட் வரலாற்றில் அந்த வெற்றி மிக முக்கியமான மைல்கல்லாக அமைந்தது. மேலும், 2026ஆம் ஆண்டில் இந்திய அணி ஆசியக் கோப்பையையும், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கத்தையும் வென்றது. குறிப்பாக, ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் வென்ற பிறகு ஹர்மன்பிரீத் இந்த கேப்டன்சி முடிவை அறிவித்துள்ளார். கேப்டன் பதவியில் இருந்து விலகுவது குறித்து ஹர்மன்பிரீத் தனது பதிவில், அணிக்காக தன்னால் முடிந்த அனைத்தையும் வழங்கியதாகவும், பல சந்தர்ப்பங்களில் தனது தனிப்பட்ட ஆட்டம் மற்றும் விருப்பங்களைக் கூட அணியின் தேவைக்காக பின்னுக்குத்தள்ளியதாகவும் தெரிவித்துள்ளார். இனிமேல் கேப்டன்சி பொறுப்பின் அழுத்தம் இல்லாமல், மீண்டும் கிரிக்கெட்டை விளையாடுவதில் மட்டுமே கவனம் செலுத்த விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த முடிவைத் தொடர்ந்து, இந்திய மகளிர் அணியின் அடுத்த கேப்டன் யார்? என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# வைபவ் சூர்யவன்ஷியின் திறமை நம் அனைவருக்கும் தெரியும்: மோர்கல்



வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில், இந்திய அணியின் இளம் வீரர் வைபவ சூர்யவன்ஷிக்கு வாய்ப்பு வழங்கப்படுமா என கேள்வி எழுந்துள்ளது. இந்த நிலையில், இந்திய அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளர் மோர்னே மோர்கல், இளம் வீரர் வைபவ் சூர்யவன்ஷியின் திறமையை அனைவரும் அறிந்ததே என்று தெரிவித்துள்ளார். இது தொடர்பாக இந்திய அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் மோர்னே மோர் கூறியதாவது, வைபவ் சூர்யவன்ஷியின் திறமை என்ன என்பது நம் அனைவருக்கும் தெரியும். அவருக்கு போட்டிகளில் அதிக நேரம் விளையாடும் வாய்ப்பு கிடைக்கவில்லை என்றாலும், அவர் அணியுடன் பயணம் செய்கிறார், டக்அவுட்டில் இருக்கிறார், ஹோட்டலில் அனுபவம் வாய்ந்த வீரர்களுடன் நேரத்தை செலவிடுகிறார். தரமான மற்றும் அனுபவம் வாய்ந்த வீரர்களுடன் தொடர்ந்து இருப்பது வைபவின் வளர்ச்சிக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்தச் சூழலில் தரமான வீரர்களுடன் அவர் செலவிடும் ஒவ்வொரு நேரமும், இந்த உயர்ந்ததரத்தில் அவர் மேற்கொள்ளும் ஒவ்வொரு பயிற்சியும், அவரது கிரிக்கெட் வாழ்க்கைக்கு மிகவும் பயனுள்ளதாகவே இருக்கும். இந்திய அணியின் சூழலில் இருந்து கற்றுக்கொள்வது வைபவ் சூர்யவன்ஷியின் எதிர்கால வளர்ச்சிக்கு முக்கியமானதாக இருக்கும். என தெரிவித்தார்.

# ஷ்ரேயாஸ் அய்யரின் தன்னலமற்ற அணுகுமுறையே அவரது சிறந்த குணம்: கம்பீர்



இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் கௌதம் கம்பீர், ஷ்ரேயாஸ் அய்யரின் தலைமைப் பண்பு மற்றும் அணிக்காக தனது தனிப்பட்ட நலனை விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைப் பாராட்டியுள்ளார்.

இது தொடர்பாக பேசிய கம்பீர், ஷ்ரேயாஸிடம் தனக்கு மிகவும் பிடித்த விஷயம் அவரது நெகிழ்வான மற்றும் தன்னலமற்ற அணுகுமுறை. குறிப்பாக, சில நேரங்களில் தனது வழக்கமான பேட்டிங் வரிசையில் களமிறங்காமல், அணியின் தேவைக்கேற்ப மற்றொரு வீரரை தனக்கு முன்பாக அனுப்புவதற்கு ஷ்ரேயாஸ் தயாராக இருந்தார்.

ஒரு அணியின் கேப்டனாக இருப்பவர், அதுவும் அணியின் முக்கிய பேட்ஸ்மேன்களில் ஒருவராக இருப்பவர், தனது தனிப்பட்ட பேட்டிங் இடத்தை விட்டுக்கொடுப்பது மிகவும் அரிதான விஷயம். பொதுவாக ஒரு முன்னணி பேட்ஸ்மேன் தனது வழக்கமான இடத்தில் விளையாட விரும்புவார். ஆனால், ஷ்ரேயாஸ் அணியின் சூழ்நிலையை முதலில் புரிந்துகொண்டு அதற்கேற்ப தனது முடிவை மாற்றிக்கொள்ளத் தயாராக இருந்தார்.

குறிப்பாக, அணியின் தேவைக்காக வேறு ஒரு வீரருக்கு அதிக முன்னுரிமை கொடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டாலும், அல்லது இடது கை – வலது கை பேட்டிங் கூட்டணியை உருவாக்க வேண்டிய அவசியம் இருந்தாலும், ஷ்ரேயாஸ் தனது தனிப்பட்ட பேட்டிங் இடத்தைப் பற்றி பிடிவாதமாக இருக்கவில்லை. அணியின் பேட்டிங் வரிசை சிறப்பாக அமைய வேண்டும் என்பதையே அவர் முக்கியமாகக் கருதியதாக கம்பீர் தெரிவித்தார். இதுபோன்ற அணுகுமுறை ஒரு வீரரிடம் இருப்பது மட்டுமல்லாமல், ஒரு தலைவரிடம் இருப்பது மிகவும் முக்கியமான குணம் என்றும் அவர் கூறினார்.

# அஞ்சலி நாயர் நடிக்கும் 'ட்ரோன்ஸ்' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




இந்தபடம் வருகிற அக்டோபர் 16ந் தேதி தியேட்டர்களில் வெளியாகும் என படக்குழு அதிகாரப்பூர்வ அறிவித்துள்ளது. வித்தியசமான கதைக்களத்தில் உருவாகி உள்ள இந்தபடத்தை காண ரசிகர்கள் ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

கனவுகளில் மட்டுமே நிகழக்கூடிய விசித்திரமான சம்பவங்கள் நிஜ வாழ்க்கையில் நடந்தால் எப்படி இருக்கும் என்ற சுவாரஸ்யமான கேள்வியை மையமாக வைத்து இப்படத்தின் கதை உருவாகியுள்ளது. ஹாரர், பேண்டஸி மற்றும் சயின்ஸ் பிக்ஷன் அம்சங்கள் கலந்த வித்தியாசமான திரைக்கதையில், மேட் சயின்டிஸ்ட், டிடெக்டிவ், ஏஞ்சல், சூனியக்காரி உள்ளிட்ட புதிரான கதாபாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன.

இப்படத்தில் சித்தி இத்னானி, அஞ்சலி நாயர், தேவதர்ஷினி, டிராவிட் செல்வம், குரேஷி, சினிமாவாலா சதீஷ், சசி செல்வராஜ் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். ஆர்ஜே தீபக் இப்படத்தின் மூலம் நடிகராக அறிமுகமாகிறார்.

# அஜய் தேவ்கன் நடித்த 'திரிஷ்யம்: தி கன்க்ளூஷன்'.. வெறும் 4 நாட்களில் ரூ.308 கோடி வசூல்




படம் வெளியான 4 நாட்களிலேயே உலகளவில் ரூ.308 கோடி வசூல் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தொடர்ந்து வசூல் அதிகரித்து வருகிறது.

மலையாள திரையுலகில் மோகன்லால் நடிப்பில் வெளியான 'திரிஷ்யம்' திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது. ஜீத்து ஜோசப் இயக்கிய இப்படம் பின்னர் தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் ரீமேக் செய்யப்பட்டு அந்தந்த மொழிகளிலும் நல்ல வரவேற்பை பெற்றது.

இந்தியில் அஜய் தேவ்கன் நடிப்பில் உருவான 'திரிஷ்யம்' படத்தின் முதல் இரண்டு பாகங்களும் ரசிகர்களிடம் தனி கவனத்தை பெற்றன. இதன் தொடர்ச்சியாக 3ம் பாகமாக 'திரிஷ்யம்: தி கன்க்ளூஷன்' (*Drishyam: The Conclusion*) திரைப்படம் கடந்த அக்டோபர் 2ந் தேதி வெளியானது.

முந்தைய இரண்டு பாகங்களிலும் தனது புத்திசாலித்தனமான திட்டங்களால் குடும்பத்தை காப்பாற்றி, போலீசாரை திணறடித்த விஜய் சல்கோன்கர் கதாபாத்திரத்தில் அஜய் தேவ்கன் மீண்டும் நடித்துள்ளார். ஸ்ரேயா சரண் மற்றும் தபு ஆகியோரும் தங்களது முந்தைய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். பிரகாஷ் ராஜ் மற்றும் ஜெய்தீப் அஹ்லாவத் ஆகியோர் புதிதாக இணைந்துள்ளனர். குறிப்பாக ஜெய்தீப் அஹ்லாவத்தின் கதாபாத்திரம் படத்தின் கதையில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக கூறப்படுகிறது. விறுவிறுப்பான சஸ்பென்ஸ் திரில்லர் கதைக்களத்துடன் வெளியான 'திரிஷ்யம்: தி கன்க்ளூஷன்' திரைப்படம் வசூல் ரீதியாகவும், விமர்சன ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்று வருவதாக கூறப்படுகிறது. இந்நிலையில், படம் வெளியான 4 நாட்களிலேயே உலகளவில் ரூ.308 கோடி வசூல் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தொடர்ந்து வசூல் அதிகரித்து வருவதால், விரைவில் இப்படம் ரூ.500 கோடி வசூல் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விஜய் சேதுபதியின் '96' திரைப்படத்தின் ரீரிலீஸ் தேதி அறிவிப்பு



விஜய் சேதுபதி, திரிஷா நடிப்பில் வெளியான 96 திரைப்படம் ரீ ரிலீஸ் செய்யப்பட உள்ளது.

தமிழ் திரைத்துறையின் முன்னணி நடிகர் விஜய் சேதுபதி. இவர் மற்றும் நடிகை திரிஷா நடிப்பில் உருவான திரைப்படம் 96. பள்ளிப்பருவ காதலை மையப்படுத்தி உருவான இப்படத்தை பிரேம் குமார் இயக்கியுள்ளார். மெட்ராஸ் எண்டர்பிரைசர்ஸ் நிறுவனம் இப்படத்தை தயாரித்துள்ளது. இப்படம் கடந்த 2018 அக்டோபர் 4ம் தேதி உலகம் முழுவதும் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

இந்நிலையில், 96 திரைப்படத்தை ரீரிலீஸ் செய்ய தயாரிப்பு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. 8 ஆண்டுகள் கழித்து 96 திரைப்படத்தை ரீரிலீஸ் செய்ய படக்குழு முடிவு செய்துள்ளது. அதன்படி, 96 திரைப்படம் வரும் 9ம் தேதி உலகம் முழுவதும் ரீரிலீஸ் ஆக உள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.